Emperor Journal of Classical Tamil Studies
ISSN: 2582-2977
www.ejcts.mayas.info
DOI-http://dx.doi.org/10.35338/EJCTS.2019.1205
© மாயாஸ் பதிப்பகம்

EJCTS
www.ejcts.mayas.info

Volume- I Issue- 1 January - 2022

# அத்தியாயம் - 27

## மரபுக்கவிதைகளில் வாழ்வியல் சிந்தனைகள்

***ப. செந்தில் முருகன்***
***முனைவர் பட்ட ஆய்வாளர்***
*இலக்கியத்துறை, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்*
***ஆய்வு நெறியாளர் : முனைவர் பெ.இளையாபிள்ளை***

## *முன்னுரை*

திங்களொடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும் உடுக்க ளோடும் மங்குல்கடல் இவற்றோடும் பிறந்த தமிழுடன் பிறந்தோம் நாங்கள். என்று தமிழின் பெருமையைப் பறைசாற்றுவார் பாவேந்தர் பாரதிதாசன். அத்தகு தொன்மையும் தாய்மைத்தன்மையும் கொண்ட செவ்வியல் மொழியான தமிழ்மொழியின்கண் சங்ககாலம் முதல் சமகாலம் வரை பண்பட்ட இலக்கண, இலக்கியப் படைப்புகள் வற்றா நதிபோல் ஊற்றெடுத்து வருகின்றன. இவற்றுள் பெரும்பாலான தமிழ் இலக்கியப் படைப்புகள் வாழ்வியல் சிந்தனைகளை அடியொற்றியே சிறப்புறப் படைக்கப்பட்டுள்ளன. தொல்காப்பியந்தொட்டு இன்றளவும் மரபுக்கவிதைகள் இயற்றுவதில் பல புதிய யாப்பியல் மரபு தோன்றியிருப்பினும், வெண்பா, ஆசிரியப்பா, விருத்தப்பா, கட்டளைக் கலித்துறை போன்ற இலக்கண வரம்பிற்குட்பட்டு இயற்றப்படும் மரபுக்கவிதைகளுக்கு இன்றளவும் சிறப்பிடமே வழங்கப்பட்டு வருகிறதெனில் அது மிகையாகா. யாப்பின் விதிமுறை வளர்ச்சியோடு எழுத்திலக்கண வளர்ச்சி, அசை இலக்கண வளர்ச்சி, சீர் இலக்கண வளர்ச்சி, தளை இலக்கண வளர்ச்சி, அடி இலக்கண வளர்ச்சி, தொடை இலக்கண வளர்ச்சி போன்றவை ஏற்பட்டு அவை

யாப்பருங்கலக் காரிகைக்குப் பிற்பட்ட காலத்தில் குறிபிடத்தக்க நிலையினை எய்தி, யாப்புறுப்புகள் அழகுற அமையும்படியும் பாக்களுக்கும், பாவின் இனங்களுக்கும் வகுக்கப்பட்டு அதன் இலக்கண மரபில் பிறழாமலும் இயற்றப்படும் மரபுக்கவிதைகளில் வாழ்வியல் சிந்தனைகள் வேரூன்றி கிடக்கின்ற. அத்தகுச் சிறப்புமிகு மரபுக்கவிதை இலக்கணங்களுள் குறள் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, இன்னிசை சிந்தியல் வெண்பா, பஃறொடை வெண்பா, அறுசீர் விருத்தம், எண்சீர் விருத்தம் ஆகிய இலக்கணங்களுக்கு உட்பட்டு காணப்படும் வாழ்வியல் சிந்தனைகளை மட்டும் தொகுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கப் பொருளாகும்.

## வெண்பா வழி வாழ்வியல் சிந்தனைகள்

புலவர்க்குப் புலி என்று சிறப்பிக்கப்படும் வெண்பா எனும் பாவகையால் இயற்றப்பட்ட செய்யுள்களில் வாழ்வியல் சிந்தனைகள் விரவிக்கிடக்கின்றன. மனிதன் தான் கடைபிடிக்க வேண்டிய வாழ்வியல் கொள்கைகளில் தலைசிறந்ததாகக் கருதப்படுவது வாய்மை என்பதே, இதனை முப்பாலில் குறள் வெண்பா வழி விளக்கும் வள்ளுவனார்.

## புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை

**வாய்மையால் காணப் படும்.**(குறள் . 298)

ஒருவன் தனது புறத்தில் ஏற்படும் அழுக்குகளை நீரின் உதவி கொண்டு தூய்மைப்படுத்த இயலும், ஆனால் மனந்தூய்மை உண்டாக்க வல்லது உண்மையுரைத்தலே எனப் பறைசாற்றுகிறார். திரிகடுகம் கண்ட நல்லாதனார் தனது நேரிசை வெண்பாவின் வழி வாழ்வியல் சிந்தனைகளைப் பறைசாற்றுவதும் போற்றத்தக்கதொன்றே.

> பிறர்தன்னைப் பேணுங்கால் நாணலும் பேணார்
> திறன்வேறு கூறில் பொறையும் - அறவினையைக்
> காராண்மை போல ஒழுகுதலும் இம்மூன்றும்
> ஊராண்மை என்னும் செருக்கு.
> (திரிகடுகம். பா - 6)

மற்றவர் தன்னைப் பெருமைப்படுத்திப் பேசும் பொழுது நாணம் அடைதலும், தன்னை விரும்பாதவர் தன்னை இகழுமிடத்துக் கோபிக்காது பொறுத்துக் கொள்ளுதலும், அறச் செயல்களை மேகம் போன்று கைம்மாறு கருதாது கொடுத்தலும் ஆகிய இம்மூன்றும் சிறந்த செல்வங்கள் என்று மனிதன் வாழ்வில் கைகொள்ள வேண்டிய சிந்தனைகள் பரவலாக்கப்பட்டுள்ளது. யாருடன் நெருங்கி பழக வேண்டும். அவற்றின் வரைமுறை எந்த அளவோடு நிற்க

வேண்டுமென்பதை பெருவாயில் முள்ளியார் தனது ஆசாரக்கோவையில் இன்னிசை வெண்பா வழியாக கூறுவது யாதெனின்,

அளையுறை பாம்பும் அரசும் நெருப்பும்
முழையுறை சீயமும் என்றிவை நான்கும்
இளைய எளிய பயின்றன என்றெண்ணி
இகழின் இழுக்கம் தரும்.
(ஆசாரக்கோவை. பா - 84)

புற்றில் வாழும் பாம்பும், அரசரும், நெருப்பும், குகையில் தங்குகின்ற சிங்கமும் என்ற இவை நான்கையும் இளையவை என்றும் எளியவை என்றும் பழகியவை என்றும் எண்ணி இகழ்ந்தால் அவை அவனுக்குத் துன்பத்தை அளிக்கும், என்றவாறு உரைப்பதன் மூலம் தங்களது மரபுக் கவிதைகளின் வழி வாழ்வியல் சிந்தனைகளை விதைத்தமை புலனாகின்றது. மேலும் இன்னிசை சிந்தியல் வெண்பா வழியாக

தக்கிணை வேள்வி தவம்கல்வி இந்நான்கும்
முப்பால் ஒழுக்கினால் காத்துய்க்க் உய்யாக்கால்
எப்பாலும் ஆகா கெடும். ஆசாரக்கோவை. பா - 3

ஆசிரியருக்குக் காணிக்கையைத் தருதல், யாகம் செய்தல், தவம் இயற்றல், கல்விகற்றல் என்ற நான்கினையும் மனம், மொழி, மெய் என்ற மூன்றும் மாறுபடாது விளங்குமாறு பாதுகாத்துச் செய்க, மாறுபட்டு விளங்கின் எக்காலத்திலும் எவ்வுலகத்திலும் தனக்குப் பயன்படாமல் போகும் என்ற கருத்தினை நிறுவுகின்றார்.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகக் கருத இடமுண்டா என்ற ஐயத்தினைத் தோற்றுவிப்பவை புல்லங்காடனார் இயற்றிய கைந்நிலையும், பொய்கையார் இயற்றிய இன்னிலையும் என்பது நாடறிந்ததே, அவற்றுள் இன்னிலை இயற்றிய பொய்கையார் பஃறொடை வெண்பாவின் வழி, காமம் என்பது யாது? அன்பு என்பது யாது? ஊடல் என்பது யாது? என்பன போன்றவற்றிக்கு விளக்கமளித்து இயற்றிய இன்பப்பால் காட்டும் மரபு சார் வரிகளும் அகத்தின் வாழ்வியல் சிந்தனைகளைத் தூவுகின்றன.

காமம்வீழ் இன்பக் கடலாமே காதலரின்
ஏம இருக்கையே தூம்திரையாம்- ஏமத்(து) ஈண்(டு)
ஆம்பரலே தோன்றும் அளியூடல் ஆம்பரலில்
தெற்றித் தெறிப்பாம் ஒளி ஒளியாய் கண்ணேசீர்த்(து)

உற்றுகப்பாய்ப் பெற்ற மகவு. (இன்னிலை. பா -27)

காமம் என்பது அனைவரும் விரும்புகின்ற இன்பக்கடலாகும். காதலர் இருவர் கருத்தொருமித்து கூடிய இன்பமான இருக்கையே வீசுகின்ற அலையாகும்; அந்தக் களிப்பிலிருந்து உண்டாகும் அன்பே முத்தாகும்; அந்த முத்தினின்று தெறித்து எழுகின்ற ஒளியே ஊடலாகும்; அந்த ஒளிபாயும் இடமே மகிழ்வுடன் பெற்ற அறிவறிந்த மக்கட் செல்வமாகும். என்றுரைத்து, காமத்தினை இன்பக்கடலுக்கு உருவகித்து, அதன் தொடர்ச்சியாக அகவாழ்க்கையினை நிரல்நிறை மாலையாக அலையெனவும், முத்தெனவும், ஒளியெனவும், அதுபாயும் இடம் எனவும் உருவகித்துக் கூறும் பாங்கு அறிந்து இன்புறத்தக்கது.

## விருத்தங்கள் வழி வாழ்வியல் சிந்தனைகள்

பல்வேறு வாழ்வியல் சிந்தனைகள் நவிழும் விவேக சிந்தாமணியில் இடம்பெறும் அறுசீர் விருத்தமான,

ஆபத்துக்(கு) உதவாப் பிள்ளை
அரும்ப சிக்குதவா அன்னம்
தாபத்தைத் தீராத் தண்ணீர்
தரித்திரம் அறியாப் பெண்டிர்
கோபத்தை அடக்கா வேந்தன்
குருமொழி கொள்ளாச் சீடன்
பாபத்தைத் தீராத் தீர்த்தம்
பயனில்லை ஏழும் தானே.
(விவேகசிந்தாமணி. பா - 1)

என்ற பாடலின் வழி இவ்வுலகில் பயனற்றவை எவையெனும் வாழ்க்கைக்குத் தேவையான சிந்தனைகளை வேரூன்றச் செய்கிறது. மேலும் மற்றொரு எண்சீர் விருத்தமான விவேகசிந்தாமணி பாடலானது.

நாய்வாலை அளவெடுத்துப் பெருக்கித் தீட்டின்
நற்றமிழை எழுதஎழுத் தாணி ஆகுமோ?
பேய்வாழும் சுடுகாட்டைப் பெருக்கித் தள்ளிப்
பெரியவிளக்(கு) ஏற்றிவைத்தால் வீட தாமோ?
தாய்வார்த்தை கேளாத சகசண் டிக்கென்
சாற்றிடினும் உலுத்தகுணம் தவிர மாட்டான்.
ஈவாரை ஈயஒட்டான் இவனும் ஈயான்
எழுபிறப்பி னும்கடையாம் இவன்பி றப்பே.
(விவேகசிந்தாமணி. பா - 14)

நாயின் வாலை அளவாக வெட்டிக்கூர் தீட்டினாலும், அது நல்ல தமிழ் எழுதும் எழுத்தாணி ஆகுமோ, பேய் வாழும் சுடுகாட்டைச் சுத்தம் செய்து பெரிய விளக்கை ஏற்றிவைத்தால் அதுவாழும் வீடாகுமோ? அதுபோல தாய்ச் சொல்லைக் கேளாத, வெட்கம் இல்லாத, முரடனுக்கு என்ன நீதிகளை எடுத்துக் கூறினாலும் அவன் தன் கருமித்தனத்தை விடவே மாட்டான். அவனும் தர்மம் செய்ய மாட்டான், தர்மம் செய்பவரையும் செய்ய விடமாட்டான். அவன் பிறப்பு, ஏழு பிறப்பிலும் கடைசி பிறப்பே எனக் கூறுவதன் மூலம் அவற்றுள் காணப்படும் மனித வாழ்விற்குத் தேவையான வாழ்வியல் சிந்தனைகள் குறித்து உணரலாகின்றது.

## முடிவுரை

உள்ளத்து உள்ளது கவிதை - இன்பம்
உருவெடுப்பது கவிதை;
தெள்ளத் தெளிந்த தமிழில் - உண்மை
தெரிந்து உரைப்பது கவிதை

என்ற கவிமணி கூற்றுக்கிணங்க கவிதையானது உள்ளத்து உணர்வின் வெளிப்பாடாக இருப்பினும் அவையாவும் தொல்தமிழ் உலகம் உரைத்த யாப்பியல் விதிகளுக்கு உட்பட்டு படைப்பாக்கம் பெறச் செய்தல் என்பது சவாலான ஒன்றேயாகும். காலக் கண்ணாடியால் இன்றும் பிரதிபலித்துக் கொண்டுள்ள செழுந்தமிழ் இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள மரபுக்கவிதைகளில் காணப்படும் வாழ்வியல் சிந்தனைகள் யாவும் எக்காலத்திற்கும் பொருந்தும் படியாக அமைந்திருப்பது மிக போற்றத்தக்க ஒன்றாகும். மனிதயினம் தனது பண்பு நலன்களை மேலோங்கச் செய்யத் தேவையான வாழ்வியல் சிந்தனைகள் மரபுக் கவிதைகளில் இலக்கண வழுவின்றி வடித்துரைக்கப்பட்டுள்ளது என்பது இக்கட்டுரையின் வழி தக்க சான்றுகளுடன் புலனாகிறது.

## துணைநூற் பட்டியல்


1. குமாரசாமிப் புலவர்.அ , யாப்பருங்கலக் காரிகை குமாரசாமிப்புலவர் உரை, இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம்,1938
2. சக்தி, விவேகசிந்தாமணி மூலமும் உரையும், பிரேமா பிரசுரம், சென்னை-2016
3. பரந்தமனார் அ.கி, கவிஞராக, பாரி நிலையம், சென்னை , 2007
4. பரிமேலழகர், திருக்குறள் மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை,2004
5. இராசாராம். துரை, பதினெண்கீழ்க்கணக்கு - தெளிவுரை, முல்லை நிலையம் பதிப்பு, 2018